இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 48 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 10 – ஞாயிற்றுக்கிழமை 27 செப்டம்பர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 48 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 10 - Sunday 27 September 2026 - Madurai 8 Pages ₹ 5.00


## ‘கஜானா காலி’ என அம்பி MODE–இல் பம்மி கைவிரிக்கிறார் முதல்வர் ஜோசப் விஜய்!

# கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றும் இலட்சணம் இதுதானா?

## முதலமைச்சருக்குரிய கண்ணியத்துடன்தான் பேசுகிறீர்களா? – என்றும்

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி!



**சென்னை, செப். 27 -**

**ஆட்சிக்கு வந்தவுடன் ‘கஜானா காலி’ என அம்பி MODE-இல் பம்மி கைவிரிக்கிறீர்களே; இது தான் கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றும் இலட்சணமா? என்று முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.**

**இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு : -**

படத்தில் நடிப்பதை நிறுத்தி விட்டேன் எனச் சொல்லிவிட்டு, மக்கள் முன் நடித்துக் கொண்டே இருக்கும் முதலமைச்சர் விஜய் அவர்களே, இன்று மதுராந்தகம் Shooting-இல் உங்களின் Dialogue Delivery-யைப் பார்த்தேன். உங்களுக்குச் சில கேள்விகள்.

**கரூர் பலி: உங்களின் கோழைத்தனமான ஓட்டத்தை வைத்து அற்ப அரசியல் ஆதாயம் தேட தி.மு.க. முயலவில்லை!”**

**அ.தி.மு.க.வில் இருந்து விலைக்கு வாங்கி, உங்கள் கட்சியின் வேட்பாளராக நிறுத்தி இருக்கும் மரகதம் குமரவேலை அருகில் வைத்துக் கொண்டே, ‘த.வெ.க, தூய சக்தி, தி.மு.க, தீய சக்தி’ என்று உங்களால் எப்படி கூச்சமே இல்லாமல் பேச முடிகிறது?**

வாக்களித்த மை, விரல் நகத்தில் இருந்து அழியும் முன்பே NDA கூட்டணி MLA-க்களைத் தூக்குவது தான் தூய சக்தியா? போகும் இடங்களில் எல்லாம் உங்கள் வேட்பாளர்கள் பெறும் வரவேற்பைப் பார்த்தீர்களா? “த.வெ.க.விடம் எவ்வளவு வாங்குனீங்க?” எனக் கேட்டு மக்களே விரட்டி அடிப்பது கூட தெரியாத நபரா நீங்கள்?

அடுத்து, தி.மு.க.வும் பா.ஜ.க.வும் வேறு வேறு இல்லை என்றும் பேசியிருக்கிறீர்கள். சட்டமன்றத்தில் ‘பா.ஜ.க.’ என்று சொன்னாலே, அது உங்கள் கூட்டணிக் கட்சி அமைச்சராகவே இருந்தாலும், அலறியடித்துக் கொண்டு அவைக் குறிப்பில் இருந்து நீக்குவது யாரென Live-இல் பார்க்கும் மக்களுக்குத் தெரியாதா?

**கட்சி தொடங்கியதில் இருந்து இப்போது வரை எத்தனை முறை நீங்கள் பா.ஜ.க.வை எதிர்த்துப் பேசியிருக்கிறீர்கள்? எத்தனை போராட்டம் நடத்தி இருக்கிறீர்கள்? பா.ஜ.க.வை எதிர்த்து நீங்கள் செய்ததெல்லாம் அமைதிப் புரட்சி மட்டும் தானே? அதாவது சரணாகதிதானே?**

“தி.மு.க. மாதிரி படிப்படியா, தகுதி வாய்ந்தவங்களுக்கு எனச் சொல்ல மாட்டேன். நடைமுறைக்குச் சாத்தியமானதை மட்டும்தான் வாக்குறுதியில் கொடுத்திருக்கேன்” - என அந்நியன் மாதிரி பேசிவிட்டு, ஆட்சிக்கு வந்ததும் ‘கஜானா காலி’ என அம்பி Mode-இல் பம்மி, கையை விரிக்கிறீர்களே? இதுதான் நீங்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றும் இலட்சணமா?

உங்கள் ஆட்சியின் திட்டங்கள் என்று பார்த்தால், நாங்கள் கொண்டு வந்த திட்டங்களின் நீட்சி மட்டுமே!

**நீங்களாகக் கொண்டு வந்த புதுமையான திட்டமெல்லாம்; வெற்றி மின்வெட்டுத் திட்டம், வெற்றி அரிவாள் வெட்டு திட்டம், வெற்றி விலைவாசி உயர்வு திட்டம், வெற்றி டெங்கு காய்ச்சல் திட்டம், வெற்றி பால் தட்டுப்பாடு திட்டம் இவ்வளவு தான்!**

பெண்களைத் தி.மு.க.வினர் அவதூறாகப் பேசுகிறார்கள் எனப் பொய் பேசும் நீங்கள், உங்கள் Virtual Abuser-களின் Track Record-ஐ எடுத்துப் பாருங்கள்.

“ஜெம் வீரமணி வழக்கைப் பத்தி வாய திறங்க ஸ்டாலின் சார்” - என high pitch-இல் கத்தினீர்களே? உங்கள் Script Paper-ஐ Update செய்யாமல் வந்து விட்டீர்களா என்ன? நான் விளக்கமாகப் பேசி விட்டேன். நீங்கள்தான் டி.வி., பேப்பர் எதையும் பார்க்கவில்லை போல. எதிர்க்கட்சியைப் பார்த்து சட்டமன்றத்தில் நீங்கள் சொன்னதையே சொல்கிறேன்... பேப்பர் படிச்சிருந்தா தெரிஞ்சிருக்கும்!

> **“ஜெம் வீரமணி வழக்கைப் பத்தி வாய திறங்க ஸ்டாலின் சார்” – என high pitch–இல் கத்தினீர்களே? உங்கள் Script Paper–ஐ Update செய்யாமல் வந்து விட்டீர்களா என்ன? நான் விளக்கமாகப் பேசி விட்டேன். நீங்கள்தான் டி.வி., பேப்பர் எதையும் பார்க்கவில்லை போல. எதிர்க்கட்சியைப் பார்த்து சட்டமன்றத்தில் நீங்கள் சொன்னதையே சொல்கிறேன்... பேப்பர் படிச்சிருந்தா தெரிஞ்சிருக்கும்!.**

இந்த வழக்கை அரசியல் ஆக்க கூடாது என உயர் நீதிமன்றம்



அறிவுறுத்தியதைக் கூடவா உங்கள் காதுகளில் அதிகாரிகள் ஓதவில்லை?

**கரூரில் 41 மனித உயிர்கள் பலியானதைக் கூட கண்டு கொள்ளாமல் ஓடி ஒளிந்து கொண்ட உங்களைப் பற்றி, “எந்தத் தலைவரும் தன் தொண்டர்கள் சாவதை விரும்ப மாட்டார்” – என்றுதான் நான் சொன்னேன். உங்களின் கோழைத்தனமான ஓட்டத்தை வைத்து அற்ப அரசியல் ஆதாயம் தேட நானோ தி.மு.க.வோ முயலவில்லை.**

ஆனால் நீங்கள் எந்த அளவு தரம் தாழ்ந்து நடந்து கொள்கிறீர்கள் என்பதைச் சும்மா இருக்கும் பெரும்பாலான நேரத்தில் யோசித்துப் பாருங்கள்.

அதனால், “முதலமைச்சர் பொறுப்புக்குரிய கண்ணியத்தோடுதான் நாம் பேசுகிறோமா?” என்பதை நீங்களே சுய பரிசோதனை செய்து கொள்ளுங்கள் CM Sir.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## ஜெம் வீரமணி வழக்கில்

# நீதிமன்ற உத்தரவை மீறி விஜய் பிரச்சாரம் செய்வதா?

## தேர்தல் ஆணையத்திடம் தி.மு.க. புகார்!

சென்னை, செப். 27 -

ஜெம் வீரமணி தொடர்பான வழக்கில் 3 மாதங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் த.வெ.க. அரசு என்ன செய்து கொண்டிருந்தது? என்று தி.மு.க. செய்தித் தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

நீதிமன்ற உத்தரவை மீறி ஜெம் வீரமணி தொடர்பான வழக்கில் தி.மு.க. மீது திட்டமிட்டு அவதூறு பரப்பப்படுவதாக குற்றம் சாட்டினார்.

உயர்நீதிமன்ற உத்தரவை மதிக்காமலும், தேர்தல் ஆணைய விதிகளை மீறியும் முதலமைச்சர் மதுராந்தகத்தில் விஜய் பேசியுள்ளதாகவும், சட்டத்திற்கு புறம்பாக செயல்படும் முதலமைச்சர் விஜய்க்கு எதிராக, தி.மு.க. சார்பில் தேர்தல் ஆணையத்தில் புகார் கடிதம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் கூறினார்.

தூயசக்தி என்று தம்மைத்தாமே தம்பட்டம் அடித்துக்கொள்ளும் த.வெ.க.வினர் இடைத் தேர்தலில் பணத்தை வாரி இறைத்து வருவதாகவும் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. விமர்சித்தார்.

## தமிழ்நாடு – மேற்குவங்கம் உள்ளிட்ட

# 5 மாநில தேர்தல் முடிவுகளை ரத்து செய்க!

## ராஷ்ட்ரிய ஜனதா தளத் தலைவர் தேஜஸ்வி வலியுறுத்தல்!

பாட்னா, செப். 27 -

ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவரும், பீகார் எதிர்க்கட்சித் தலைவருமான தேஜஸ்வி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், SIR என்ற பெயரில் தகுதியான வாக்காளர்கள் தொடர்ந்து பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு வருவதாகவும், இதன் மூலம் ஜனநாயகத்தை சீர்குலைக்கும் கருவியாக தேர்தல் ஆணையம் மாறியுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரதமர் மோடியும், ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவும் இணைந்து தேர்தல் ஆணையத்தை, ஜனநாயகத்தை அழிக்கும் கருவியாக மாற்றிவிட்டதாக தேஜஸ்வி குற்றஞ் சாட்டியுள்ளார்.

SIRக்குப் பின் அண்மையில் நடந்து முடிந்த தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், புதுச்சேரி, அசாம் ஆகிய 5 மாநில தேர்தல் முடிவுகளை உடனே ரத்து செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல் ஆணையத்தை வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், பொறுப்புக் கொண்டதாகவும் மாற்ற மக்கள் அனைவரும் விரைவில் வீதியில் இறங்கிப் போராடுவார்கள் என்றும் தேஜஸ்வி தெரிவித்துள்ளார்.